# திறன் தமிழகம்

காலாண்டு மலர்

**29ஆம் இதழ்**

ஜூலை 2024 முதல்
செப்டம்பர் 2024 வரை





**21.09.2024** அன்று கோயம்புத்தூர் ஈச்சனாரியில் உள்ள இரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகமும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையமும் இணைந்து மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை நடத்தினர். இம்முகாமில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் விழா பேருரையாற்றி பணிநியமன ஆணைகளை வழங்கினார். இம்முகாமில் துறையின் செயலர் திரு. கொ.வீரராகவராவ் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் ஆணையர் திருமதி. எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

# கல்வித்தொலைக்காட்சியில் அரசுப்பணி போட்டித்தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்

**ஒளிபரப்பு நேரம் :**
**திங்கள் முதல் வெள்ளி வரை**
**காலை 7 மணி முதல்**
**9 மணி வரை**

**மறுஒளிபரப்பு நேரம் :**
**திங்கள் முதல் வெள்ளி வரை**
**மாலை 7 மணி முதல்**
**9 மணி வரை**

* தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
* தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்
* ஆசிரியர் தேர்வு வாரியம்
* பணியாளர் தேர்வாணையம்
* இரயில்வே தேர்வு வாரியம்
* வங்கிப்பணியாளர் தேர்வு நிறுவனம்

போன்ற முகமைகளால் நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள்,
கலந்துரையாடல்கள், ஊக்க உரைகள்,
முந்தைய ஆண்டுகளின் வினாத்தாள் ஆய்வு மற்றும்
நடப்பு நிகழ்வுகள் ஆகியவை இந்நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்படும்.

**இதே நிகழ்ச்சியினை**

**TN Career Services Employment என்ற**

**YouTube Channel-ல் காணலாம்**

**https://tamilnaducareerservices.tn.gov.in/**

**என்ற இணையதளத்தில் இவ்வனைத்து தேர்வுகளுக்கான**
**மென்பாடக்குறிப்புகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்**

# ஆசிரியர் உரை

"வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்." (குறள் 518 )



என்ற குறளுக்கேற்ப, ஒருவன் ஒரு தொழிலைச் செய்வதற்கு உரியவராக இருப்பதை ஆராய்ந்த பிறகு அவரை அத்தொழிலுக்கு உரியவராகும்படி செய்வதே சிறந்த தொழில்நெறி வழிகாட்டுதல் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் ஜீலை மாதம் 2 வது வாரத்தில் உலக இளைஞர் திறன் தினத்தை மையப்படுத்தி, தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் திறன் விழிப்புணர்வு வாரமானது, தொழில்முனைவுக்கான திறன்களைக் கொண்ட இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் இந்த ஆண்டும், அனைத்து சார்நிலை அலுவலகங்களிலும் மாற்றுத்திறனாளிகள், மகளிர், பொறியியல் மாணவர்கள், பள்ளி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள், தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள், பாலிடெக்னிக் மாணவர்கள் ஆகியவர்களுக்கு 231 தொழில்நெறி வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது. அதில் 30,079 மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

நமது சார்நிலை அலுவலகங்களில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி II/IIA முதல்நிலை தேர்விற்கான இலவச பயிற்சி, வகுப்புகள் நடத்தப்பட்டதில் 2,561 மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர். மாநில அளவில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தரத்திற்கு நிகராக 3 மாதிரி தேர்வுகள் நடத்தப்பட்டு மாணவர்களுக்கு மாநில அளவிலான தரவரிசை பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த காலாண்டில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சேர்ந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் மற்றும் மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்கள் ஆகியோர் இணைந்து, பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றும், உயர்கல்வியில் சேராத மாணவர்களுக்கென, இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட "உயர்வுக்கு படி" நிகழ்ச்சி மூலம் பல்வேறு மாணவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களிலும், கல்லூரிகளிலும் சேர்க்கை பெற்று தங்கள் கனவு தொழிலுக்கான இலக்கை நோக்கிய பயணத்தை துவங்க சிறப்பான பணியை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், இக்காலாண்டில் 174 தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டதன் மூலமாக 10,481 வேலைநாடுநர்கள் பல்வேறு முன்னனி நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பயிற்சி பிரிவால், இக்காலாண்டில் சிறப்பான முறையில், பிரதம மந்திரி தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 1522 மாணவர்கள் தொழிற்பழகுநர் பயிற்சியில் இணைந்துள்ளனர்.

திறன்மிகு தமிழகத்தை, வேலை பெற்ற இளைஞர்கள் நிறைந்த மாநிலமாக உயர்த்திட பல்வகை முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது நமது வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை.



இயக்குநர்

# திறன் தமிழகம்

காலாண்டு மலர் 29ஆம் இதழ் ஜுலை 2024 முதல் செப்டம்பர் 2024 வரை

முதன்மை ஆசிரியர்
**பா. விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப.,**
இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
இயக்ககம், கிண்டி, சென்னை-32.

ஆசிரியர் குழு

**திருமதி. வே. மீனாட்சி**
இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு )

**திருமதி. ஆ. அனிதா**
இணை இயக்குநர் (தொழில்நெறி வழிகாட்டல்)

**திரு.தி. இராஜசேகர்**
கூடுதல் இயக்குநர் (மாநில திட்ட செயலாக்கப் பிரிவு)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**திறன் தமிழகம்**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை,**
**ஆணையரகம்,**

திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–32.

தொலைபேசி எண் : 044 22500900, 22500911
தொலை நகல் எண் : 044 22501595
கருத்துருவாக்கம் : வேலைவாய்ப்பு பிரிவு, தொழில் ஆராய்வு பிரிவு, இயக்ககம்.
வடிவமைப்பு : திரு.பாலசுப்ரமணி, முதுநிலை ஓவியர், வேலைவாய்ப்பு பிரிவு, இயக்ககம்.

## உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் வாரம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 5 |
| 2 | தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் | 16 |
| 3 | தன்னார்வ பயிலும் வட்டத்தில் நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் | 17 |
| 4 | மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் | 22 |
| 5 | நான் முதல்வன் திட்டத்தின் கீழ் “உயர்வுக்குப் படி” நிகழ்ச்சி | 28 |
| 6 | இந்திய விமானப்படை அக்னிவீர்வாயு தேர்வு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 33 |
| 7 | அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாடுகள் | 35 |

# தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் வாரம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

## மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், ஈரோடு



09.07.2024 அன்று மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடத்தப்பட்டது.

மாவட்ட தொழில் மைய உதவி இயக்குநர், திரு.ஜெகன்ராஜ் அவர்கள் சுயதொழில் கடனுதவி திட்டங்கள் குறித்து எடுத்துக்கூறி மனுதாரர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார். மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.குழந்தைசாமி அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள், நலத் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். மாவட்ட திறன் பயிற்சி அலுவலக உதவி இயக்குநர் திரு.ஆனந்தகுமார், திறன்பயிற்சிகள் குறித்தும், திறன்பயிற்சி முடித்தபின் சுயதொழில் தொடங்குவது குறித்தும் எடுத்துரைத்தார். ஈரோடு, கனரா வங்கி கிராமப்புற சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குநர், திரு.சண்முக சுந்தரம் அவர்கள் கனரா வங்கியில் வழங்கப்படும் திறன் பயிற்சிகள் குறித்து எடுத்துரைத்தார். திருமதி. டி.ஜோதி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் போட்டித்தேர்வுகள், மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் உள்ள முன்னுரிமைகள், இட ஒதுக்கீடு ஆகியவை குறித்து எடுத்துரைத்தார். திரு. சதிஷ், தொழில்முனைவோர் (மா. தி) அவர்கள் கடனுதவி பெற்று சுயதொழில் செய்த அனுபவங்களை மனுதாரர்களிடையே எடுத்துக் கூறி தன்னம்பிக்கையூட்டினார். இறுதியாக திருமதி.கி.பாண்டீஸ்வரி, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் 46 மாற்றுத்திறனாளிகள் 2 வேலையளிப்போர் மற்றும் 2 திறன் பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொண்டனர். 4 மாற்றுத்திறனாளி மனுதாரர்களுக்கு பணி வாய்ப்பு வழங்கப்பட்டது. 14 நபர்கள் திறன்பயிற்சிக்கு பதிவு செய்தனர். சுயதொழில் தொடர்பாக 2 மனுதாரர்களது விண்ணப்பங்கள் மாவட்ட தொழில் மையத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

# பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி

## மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், இராமநாதபுரம்



10.07.2024 அன்று இராமநாதபுரம் ஆண்ட்ரூஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம் நிகழ்ச்சியில் திரு. பா. விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப. மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் பெண்கள் முன்னேற்றத்திற்கு கல்வியின் அவசியம் குறித்து உரையாற்றினார். பல்வேறு துறைகளில் பெண்களுக்கான விழிப்புணர்வு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-II மற்றும் IIA போட்டித் தேர்வுகளில் பங்குகொள்வதற்கான வழிமுறைகள் மற்றும் அரசால் வழங்கப்படும் கல்விக்கான ஊக்கத் தொகை பற்றிய விழிப்புணர்வு குறித்து இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் மற்றும் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் 126 மாணவிகள் கலந்து கொண்டனர்.



# மகளிருக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கள்ளக்குறிச்சி



மகளிருக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி 10.07.2024 அன்று முற்பகல் ஸ்ரீ சாரதா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, உளுந்தூர்பேட்டையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருமதி. ஆயிஷா பேகம், உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம் அவர்கள் கலந்து கொண்டு இந்திய இராணுவத்தில் பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் குறித்து சிறப்புரையாற்றினார். செல்வி. தீபிகா, மாவட்ட சமூக நல அலுவலர், அவர்கள் பெண் கல்வி, பெண் முன்னேற்றத்திற்கான முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்து கூறினார். திரு. மு. முரளிதரன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், அவர்கள் 'Set a Goal' என்ற தலைப்பில் PPT உதவியுடன் சிறப்புரையாற்றினார். மேலும், திரு.அ.கா.செங்கதிர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், அவர்கள் மத்திய, மாநில அரசுகளில் உள்ள வேலைவாய்ப்புகள் குறித்து PPT உதவியுடன் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் 110 மாணவிகள் கலந்து கொண்டனர்.

# மகளிருக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், சேலம்**




மகளிருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி 10.07.2024 அன்று சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி - II மற்றும் IIA தேர்வுகள் குறித்த வழிகாட்டுதல்கள் மற்றும் திறன் பயிற்சி குறித்த விழிப்புணர்வு, சுய தொழில் குறித்த விழிப்புணர்வு மற்றும் அரசு பணிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு குறித்த விவரங்கள் ஆகியவை எடுத்துரைக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் துணை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், இளம் தொழில் அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் ஆதரவற்ற விதவை முன்னுரிமை பெற்ற 23 பெண்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், சேலம்**





தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி 11.07.2024 அன்று சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி - II மற்றும் IIA தேர்வுகள், தனியார் துறை வேலைவாய்ப்பு இணையம், வேலைவாய்ப்பு முகாம்கள், அக்னிவீர் வாயு தேர்வுகள், அரசால் வழங்கப்படும் கல்விக்கான ஊக்கத்தொகை விவரங்கள், சுய தொழில் குறித்த விழிப்புணர்வு குறித்த விவரங்கள் எடுத்துரைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில், Niral Digital Infotech நிறுவனத்தின் Industry Personnel Proprietor, தொழிற்பயிற்சி அலுவலர், சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மற்றும் இளம் தொழில் அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில், 93 மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# மகளிருக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், அரியலூர்



2024-ம் ஆண்டிற்கான தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரத்தின் மகளிருக்கான தொழில்நெறி விழிப்புணர்வு நிகழ்ச்சி 10.07.2024 அன்று அரியலூர் மீரா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. அ. கலைச்செல்வன் அவர்கள் ஒன்றிய, மாநில அரசு போட்டித்தேர்வுகள், திறன்பயிற்சிகள், வேலைவாய்ப்பு அலுவலக செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார்.

இவ்வலுவலக Young Professional திரு.அ.எபினேசர் ராஜா, அவர்கள் சுயவேலைவாய்ப்பு, கடன் உதவி, போட்டித்தேர்வு தயாரிப்பிற்கான அரசின் இணையதள முகவரிகள் குறித்து எடுத்துரைத்தார். மீரா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் திருமதி. கலைச்செல்வி அவர்கள் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் 250 மகளிர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# மகளிருக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தருமபுரி



மகளிருக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரிமங்கலத்தில் 10.07.2024 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி.ம.தீபா அவர்கள், உயர்கல்வி, கல்வி உதவித் தொகை, சுயவேலைவாய்ப்பு, இராணுவத்தில் வேலைவாய்ப்பு (அக்னிவீர்வாயு), போட்டித்தேர்வுகள், தன்னம்பிக்கை ஊட்டும் சிறப்புரைகள், அரசால் வழங்கப்படும் கல்விக்கான உதவித்தொகை விவரங்கள், அரசு பணிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் மெய்நிகர் கற்றல் வலைதளத்தின் முக்கியத்துவம் குறித்த விவரங்களை எடுத்துரைத்தார். தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் இளம் தொழில் அலுவலர் திரு. க. விஜயகுமார், அவர்கள் NCS Portal பதிவுசெய்தல் குறித்தும், வேலைவாய்ப்பினை பெற குறுகிய கால தொழில்திறன் பயிற்சி, அயல் நாட்டில் உயர்கல்வி, மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் செயல்பாடுகள்



ஆகியவை குறித்தும் எடுத்துரைத்தார். இந்தியன் வங்கி ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் திரு.ச.ஆதவன் அவர்கள் சுயதொழில் பற்றியும், சுயதொழில் துவங்கிட வங்கிகளில் வழங்கப்படும் மானியத்துடன் கூடிய கடன்கள், அலுவலகத்தில் வழங்கப்படும் பயிற்சிகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

மேலும், கல்லூரியில் 'அமைதி மற்றும் வளர்ச்சிக்கான இளைஞர்களின் திறன்கள்' எனும் தலைப்பில் நடைபெற்ற கட்டுரை போட்டியில் முதல் பரிசு வென்ற ஆ.யசோதா என்ற மாணவிக்கு கல்லூரி முதல்வர் பரிசினை வழங்கினார், இரண்டாம் பரிசு வென்ற ம.அனுசர்மா என்ற மாணவிக்கு தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் இளம் தொழில் அலுவலர் பரிசினை வழங்கினார் மற்றும் மூன்றாம் பரிசு வென்ற பூ.குமுதா என்ற மாணவிக்கு இந்தியன் வங்கி ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் திரு.ச.ஆதவன் பரிசினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் 307 மாணவிகள் கலந்து கொண்டனர்.

## அரசினர் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கரூர்



11.07.2024 அன்று அரசினர் தொழில்நுட்ப கல்லூரியில் தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் திரு. லோகநாதன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கரூர் இளம் வல்லுநர் திரு. அ. வீரக்குமார் அவர்கள் ஒன்றிய மாநில அரசுகளின் போட்டித்தேர்வுகள் குறித்து எடுத்துரைத்தார். இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு. ம. தர்மலிங்கம் அவர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் நடைமுறை குறித்தும் மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி, சுயவேலைவாய்ப்பு, வயது வரம்பு சலுகைகள், இடஒதுக்கீடு, முன்னுரிமை குறித்தும் சிறப்புரையாற்றினார். இக்கல்லூரியின் பணிநியமன அலுவலர் திரு. பாலமுருகன் மற்றும் கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் திரு.மோகன்ராஜ் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் 126 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருப்பூர்



12.07.2024 அன்று குண்டடம், திருப்பூர், அரசினர் மேல்நிலைப் பள்ளியில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், திரு. சுரேஷ் அவர்கள் “கனவுகள் மெய்பட” என்ற தலைப்பில் உயர் கல்வி குறித்தும், வாழ்க்கை நெறி குறித்தும் பள்ளி மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். தாராபுரம், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திருமதி. தமிழ்செல்வி அவர்கள் பள்ளி மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி நிலையங்கள் வழங்கும் “நவீன திறன் பயிற்சிகள்” குறித்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் 123 பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு வார தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருச்சி



09.07.2024 முதல் 12.07.2024 வரை தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு வாரத்தினை முன்னிட்டு பல்வேறு பள்ளி, கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு அப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். மேலும், திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்ட இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி II தேர்வில் தேர்ச்சி பெற்று நெடுஞ்சாலைத் துறையில் உதவியாளராக பணி நியமனம் பெற்ற திருமதி. மலர் என்ற சைரா பானு, சமூக பாதுகாப்புத் துறையில் உதவியாளராக பணி நியமனம் பெற்ற செல்வி. ஷாலினி, இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணி நியமனம் பெற்ற திருமதி. கோமதி மற்றும் திருமதி.பேபிகலா, ஆகியோருக்கு நினைவு பரிசினையும் “உலக திறன் நாளான“ 15.07.2024 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. மா. பிரதீப்குமார் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

## அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவிகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தேனி





தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் நடத்தப்பட்ட தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரம் ஐந்தாம் நாள் நிகழ்ச்சியான 15.07.2024 அன்று அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி, ஆண்டிபட்டி அரசினர் மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டது. ஆண்டிபட்டி அரசினர் தொழில் பயிற்சி நிலையத்தின் முதல்வர், வரவேற்புரை நிகழ்த்தினார். தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. த. அருண்நேரு (மு.கூ.பொ) அவர்கள் ஒன்றிய மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகள், தன்னார்வ பயிலும் வட்டம், கல்வித் தொலைக்காட்சி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் போட்டித்தேர்வுகளுக்கான வலையொலி பக்கம் (YouTube), மெய்நிகர் கற்றல் வலைதளம் மற்றும் தனியார்துறை வேலை இணையம், அக்னிவீர் வாயு தேர்வு மற்றும் சுயவேலைவாய்ப்பு, மென்திறன்களை வளர்த்தல் மற்றும் தொழில் முனைவோர் குறித்து உரையாற்றினார். மேலும், மனிதவள மேம்பாட்டு அலுவலர், தேனி குரு கிருஷ்ணா மில்ஸ், அவர்கள் தொழிற்பழகுநர் பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி மாணவர்களுக்கு தொழில்துறையில் உள்ள பல்வேறு வேலைவாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் 72 மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## பாலிடெக்னிக் மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், சேலம்

பாலிடெக்னிக் மாணவர்களுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி 15.07.2024 அன்று சேலம் CSI பாலிடெக்னிக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி II/IIA தேர்வுகள், தனியார் துறை வேலைவாய்ப்பு இணையம், வேலைவாய்ப்பு முகாம்கள், அக்னிவீர் வாயு தேர்வுகள், அரசால் வழங்கப்படும் கல்விக்கான ஊக்கத்தொகை விவரங்கள் மற்றும் சுய தொழில் குறித்த விழிப்புணர்வு விவரங்கள் எடுத்துரைக்கப்பட்டன.






மற்றும் சுய தொழில் குறித்த விழிப்புணர்வு விவரங்கள் எடுத்துரைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில், சேலம் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தின் உதவி இயக்குநர் அவர்கள், கல்லூரியின் முதல்வர், சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் மற்றும் இளம் தொழில் அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் 157 மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## பள்ளி மாணவ மாணவிகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தருமபுரி



பள்ளி மாணவ மாணவிகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி வாரியார் மேல்நிலைபள்ளி, தருமபுரியில் 15.07.2024 அன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு. உ. முரளிதரன் அவர்கள், மாணவ மாணவிகளுக்கு உயர் கல்வி, போட்டித்தேர்வுகள், தொழில்பயிற்சி, சுயவேலைவாய்ப்பு, வங்கி கடன் உதவி, வேலைவாய்ப்பினை பெற குறுகிய கால தொழில்திறன் பயிற்சி, தன்னம்பிக்கை ஊட்டுதல் போன்ற தலைப்புகள் குறித்து எடுத்துரைத்தார். மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் இளம் தொழில் அலுவலர் திரு.க.விஜயகுமார் அவர்கள், உயர்கல்வி, கல்வி உதவித்தொகை, மத்திய, மாநில அரசு வேலைவாய்ப்புகள், அக்னிவீர்வாயு, சுயவேலைவாய்ப்பு, மெய்நிகர் கற்றல் வலைதளத்தின் முக்கியத்துவம், அரசு சார்ந்த நிறுவனங்கள், தனியார்துறை வேலைவாய்ப்பு, NCS Portal பதிவுசெய்தல் குறித்தும், மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் செயல்பாடுகள் குறித்தும் எடுத்துக் கூறினார். தருமபுரி மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தின் உதவி பயிற்சி அலுவலர் திரு.K.மகேந்திரன் அவர்கள், மாணவர்களுக்கு Skill India Digital Hub's (SIDH), TNSkill இணையதளம் பற்றியும், தொழில்பயிற்சி 4.0 பற்றியும், மத்திய மாநில அரசுகளால் வழங்கப்படும் தொழில்கடன்கள் குறித்த விவரங்களையும் எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் 193 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.





# அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவிகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், அரியலூர்**

2024-ம் ஆண்டிற்கான தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரத்திற்கான ஐந்தாம் நாள் நிகழ்ச்சி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கான தொழில்நெறி விழிப்புணர்வு நிகழ்ச்சியாக 15.07.2024 அன்று அரியலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு.ச.மணிமாறன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.அ.கலைச்செல்வன் அவர்கள் ஒன்றிய, மாநில அரசு போட்டித்தேர்வுகள், திறன்பயிற்சி, வேலைவாய்ப்பு அலுவலக செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். இவ்வலுவலக Young Professional திரு.அ.எபினேசர் ராஜா, அவர்கள் தொழில் முனைவோர் ஆவது குறித்தும், சுயவேலைவாய்ப்பு, கடன் உதவி, அரசின் இணையதள முகவரிகள் குறித்து எடுத்துரைத்தார். தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு. நாகராஜன் அவர்கள் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் 129 மாணவ மாணவியர்கள் கலந்துக் கொண்டு பயனடைந்தனர்.

# அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவிகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கிருஷ்ணகிரி**

உலக இளைஞர் திறன் நாளினை முன்னிட்டு ஓசூர் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி 15.07.2024 அன்று நடத்தப்பட்டது. ஓசூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின்





முதல்வர் திரு.ஜகநாதன் அவர்கள் தலைமை வகித்து திறன் பயிற்சி குறித்த முக்கியத்துவத்தினை மாணவர்களிடையே விளக்கினார். தொழிற்பயிற்சி நிலையத்தின் பயிற்சி அலுவலர் திரு.சாமுவேல் உயர்கல்வி குறித்தும், மென்திறன் பயிற்சியாளர் திரு.நிமலன் மரகதவேல் பல்வேறு தனியார்துறை வேலை நிறுவனங்களில் மென்திறன் பயிற்சியின் தேவை மற்றும் முக்கியத்துவம் குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.ம.கௌரிசங்கர் அவர்கள் பல்வேறு தனியார்துறை வேலைவாய்ப்புகள், தமிழ்நாடு தனியார் வேலை இணையம், போட்டித்தேர்வுகள், மெய்நிகர் கற்றல் வலைதளத்தில் பதிவு செய்தல் மற்றும் அக்னிவீர் வாயு தேர்வு ஆகியன குறித்து எடுத்துரைத்தார். இதில் 212 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கள்ளக்குறிச்சி





அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி 15.07.2024 அன்று அரசு தொழிற் பயிற்சி நிலையம், சங்கராபுரத்தில் நடைபெற்றது. திரு. சிவநாதன், உதவி பொறியாளர், மாவட்ட தொழில் மையம், அவர்கள் புதிதாக தொழில் துவங்குவது குறித்தும், தொழில் துவங்குவதில் அரசின் சலுகைகள் மற்றும் மாவட்ட தொழில் மையம் சார்பில் வழங்கப்படும் மானியங்களின் விவரங்களை விரிவாக எடுத்துக் கூறினார். திரு.மு.முரளிதரன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், அவர்கள் தனியார் வேலை இணையம், தனியார்துறையில் வேலைவாய்ப்பு ஆகியவை குறித்து விரிவாக உரையாற்றினார். திரு. அ. கா. செங்கதிர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், அவர்கள் ஐ.டி.ஐ முடித்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார்.மேலும், திரு.பாலாஜி, பொது மேலாளர், ஸ்டார் குரூப் நிறுவனம், கள்ளக்குறிச்சி தொழில் முனைவோர் ஆவது குறித்தும் தனது முன் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் 90 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள்

## அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவிகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், நாமக்கல்**



தொழிற்பயிற்சி நிலைய மாணவ, மாணவியருக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி 19.08.2024 அன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கீரம்பூரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி. பொ. மா. ஷீலா அவர்கள், சுய தொழில், மேற்படிப்பு பயில்வது, டிப்ளமோ, போட்டித்தேர்வு, ஒன்றிய அரசு தொழிற்சாலைகளில் Trade வாரியாக பணிவாய்ப்பு பெறுவது குறித்து எடுத்துரைத்து விளக்கவுரையாற்றினார். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அவர்கள் போதைப்பொருள்களின் தாக்கம் மற்றும் அதன் விழிப்புணர்வு பற்றியும் எடுத்துக் கூறினார்கள். இந்நிகழ்ச்சியில் 306 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கரூர்**





23.08.2024 அன்று கரூர் மாவட்டம் வெள்ளியனை, ஸ்ரீ அமராவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி. டி. டி. சாந்தி அவர்கள் மாணவர்களுக்கு உயர்கல்வி, சுயவேலைவாய்ப்பு, போட்டித்தேர்வுகள் குறித்து சிறப்புரையாற்றினார். இளம் வல்லுநர் திரு.அ.வீரக்குமார் அவர்கள் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் போட்டித்தேர்வுகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் இக்கல்லூரியின் ஆசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் 340 மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# தன்னார்வ பயிலும் வட்டத்தில் நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள்



## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-II/II A தேர்வுக்கான ஒருங்கிணைந்த குறுகிய கால அடிப்படை பயிற்சி வகுப்பு துவக்க நிகழ்ச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், விருதுநகர்

01.07.2024 அன்று மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், விருதுநகரில் TNPSC தொகுதி-II/II A மாணவர்களுக்கு ஒருங்கிணைந்த குறுகிய கால அடிப்படை பயிற்சி வகுப்பு துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் திரு. வீ.பெ. ஜெயசீலன்., இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், விருதுநகர், திருமதி. சு.ஞானபிரபா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், விருதுநகர் மற்றும் திருமதி அ. பிரியதர்ஷினி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார். இதில் 145 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி–II மற்றும் II A கட்டணமில்லா பயிற்சி வகுப்பை பார்வையிடுதல்

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், இராணிப்பேட்டை





03.07.2024 அன்று இராணிப்பேட்டை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் ஆணையர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப. அவர்கள் வருகை புரிந்து ஆய்வு செய்து தன்னார்வ பயிலும் வட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு போட்டித்தேர்வுகளை எதிர்கொள்ள செய்தித்தாள்களை தினமும் படித்து குறிப்பெடுத்து பழகவேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், அதனைத் தொடர்ந்து மாணவ மாணவிகளுக்கு இலவச பாடக்குறிப்புகள் அடங்கிய புத்தகங்களை வழங்கினார், மேலும் அதனைத் தொடர்ந்து வினாடிவினா போட்டி நடத்தி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சென்னை மண்டல இணை இயக்குநர் திரு.R.தேவேந்திரன் அவர்கள் மாணவ மாணவிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

# தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி -II மற்றும் IIA பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுக்கு இலவச பயிற்சி வகுப்பு துவக்க விழா

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், வேலூர்



வேலூர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தில் போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. 03.07.2024 அன்று TNPSC GROUP – II, IIA-க்கான போட்டித்தேர்வு பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள், வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா. சுப்புலெட்சுமி இ.ஆ.ப., அவர்கள், சென்னை மண்டல இணை இயக்குநர் திரு. இர. தேவேந்திரன் அவர்கள், வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய உதவி இயக்குநர் திரு. க. காந்தி, இளநிலை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி.ம.சரண்யாதேவி ஆகியோர் கலந்து கொண்டு போட்டித்தேர்வுகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கினார்கள். மாணவ மாணவிகளுக்கு இலவச பயிற்சி கையேடுகள் வழங்கப்பட்டன. இதில் 54 மாணவ மாணவியர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



## தன்னார்வ பயிலும் வட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி தொகுதி –II மற்றும் IIA இலவச பயிற்சி வகுப்பு

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கன்னியாகுமரி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கன்னியாகுமரி மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-II/II A தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள் 03.07.2024 அன்று துவங்கப்பட்டது. இதில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவர் திருமதி.ஜெரிபா. ஜி இம்மானுவேல் அவர்கள் முந்தைய ஆண்டு தொகுதி II & IIA தேர்வில் தன்னார்வ பயிலும் வட்டத்தில் பயின்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூலம் வழங்கப்பட்ட பணி நியமன ஆணை மற்றும் பரிசுகளை பற்றி இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு எடுத்துரைத்து ஊக்கமூட்டினார். இப்பயிற்சி வகுப்பில் 91 மாணவ / மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி -II மற்றும் IIA பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுக்கு இலவச பயிற்சி வகுப்பு துவக்க விழா

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருவண்ணாமலை



தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி-II/IIA பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுக்கு இலவச பயிற்சி வகுப்பு துவக்க விழா 08.07.2024 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் செல்வி. லோ. யோகலட்சுமி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருவண்ணாமலை, அவர்கள் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் 61 மாணவ-மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-II/II A கட்டணமில்லா பயிற்சி வகுப்பை பார்வையிடுதல்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி



01.08.2024 அன்று மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், புதுக்கோட்டை அலுவலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-II/IIA தேர்விற்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்பினை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, ஆணையர் திருமதி. எ. சுந்தரவல்லி, இ. ஆ. ப., சென்னை அவர்கள் பார்வையிட்டு பயிற்சி பெறும் மாணவ மாணவிகளுக்கு போட்டித்தேர்வுகளை எதிர்கொள்ளும் முறைகள், போட்டித்தேர்விற்கு தயராகும் முறைகள், செய்தித்தாள் வாசித்தலின் அவசியம் மற்றும் தன்னம்பிக்கையூட்டும் உரையினையும் வழங்கினார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-II/IIA தேர்விற்கு தயராகும் தன்னார்வ பயிலும் வட்ட மாணவ, மாணவிகளுக்கு பாடக்குறிப்புகளையும் ஆணையர், அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர், திருமதி. மு. அருணா, இ.ஆ.ப, அவர்கள், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) (பொறுப்பு), மதுரை மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மாணவ, மாணவியர்களுக்கு தன்னம்பிக்கை உரையாற்றினார்கள்.

# சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் போட்டித்தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்பு துவக்க விழா

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கடலூர்**




07.08.2024 அன்று TNPSC தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்பு துவக்க விழா சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பணியமர்வு இயக்குநர் திரு.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. ஆ. பொ. ஆறுமுக வெங்கடேஷ் மற்றும் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு. இ. வெங்கட்டராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் 186 மாணவ மாணவிகள் கலந்துக்கொண்டனர்.

# ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளுக்கான எழுத்துத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான மாதிரி நேர்காணல்

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கோவை**



24.08.2024 அன்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளுக்கான எழுத்துத் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாதிரி நேர்காணல் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திருமதி. ஆ. ஜோதிமணி, மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) கோயம்புத்தூர், திரு. மு. கருணாகரன், துணை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கோயம்புத்தூர், திருமதி,சங்கீதா, உதவிப் பொறியாளர், PWD ஆகியோர் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தினர். இந்த நேர்காணலில் 09 மனுதாரர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

# தன்னார்வ பயிலும் வட்டத்தில் தொகுதி -II மற்றும்IIA க்கான மாநில அளவிலான மாதிரி தேர்வு நடத்துதல்









தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி – II க்கு 507 காலிப்பணியிடங்களும் மற்றும் தொகுதி IIA விற்கு 1820 காலிப்பணியிடங்களும், மொத்தமாக 2327 காலிப்பணியிடங்களுக்கான அறிவிப்பு 20.06.2024 அன்று வெளியிடப்பட்டு, அதற்கான முதல் மாதிரி தேர்வு சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டத்தில் 28.08.2024 அன்று நடத்தப்பட்டது. இதில் 131 மாணவ மாணவியர் கலந்து கொண்டு தேர்வு எழுதினர்.

இம்முழுமாதிரி தேர்வில் கலந்து கொண்ட மாணவ மாணவியருக்கு சென்னை மண்டல இணை இயக்குநர் அவர்கள் அறிவுரைகள் வழங்கி, தேர்வுகளை மேற்பார்வையிட்டார். இத்தேர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு மதிப்பெண் அடிப்படையிலான தரவரிசை பட்டியல் வழங்கப்பட்டது.

## தன்னார்வ பயிலும் வட்டத்தில்  தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தொகுதி -II மற்றும்IIA க்கான மாநில அளவிலான மாதிரி தேர்வு நடத்துதல்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், விழுப்புரம்



விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 28.08.2024, 02.09.2024 மற்றும் 06.09.2024 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-II/IIA க்கான மாநில அளவிலான மாதிரி தேர்வுகள் நடத்தப்பட்டது. இத்தேர்வுகளில் 469 மாணவ / மாணவிகள் கலந்து கொண்டு தேர்வெழுதினர்.

# தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள்

### சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருப்பத்தூர்



திருப்பத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 19.07.2024 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 15 வேலையளிப்பவர்கள், 124 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். அதில் தேர்வு செய்யப்பட்ட 27 வேலைநாடுநர்களுக்கு திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் திரு. கே.தர்பகராஜ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

# மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள்

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், வேலூர்



வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 20.07.2024 அன்று காலை 8.00 மணி அளவில் டி.கே.எம். மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. V.R. சுப்புலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய உதவி இயக்குநர் திரு. க. காந்தி, மாவட்ட ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்குநர் திரு.நாகராஜன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கினார். இதில் 70 தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டனர். கிராமப்புற படித்த வேலைவாய்ப்பற்ற மாணவ மாணவியர் 1249 பேர் கலந்து கொண்டனர். 126 பேருக்கு அவ்விடத்தில் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

## மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தஞ்சாவூர்



16.08.2024 அன்று பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு அரங்கத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பா.பிரியங்கா பங்கஜம் இ.ஆ.ப., அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இம்முகாமில் 16 வேலையளிப்பவர்கள் கலந்து கொண்டனர். 129 மாற்றுத்திறனாளி வேலை நாடுநர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் 22 வேலைநாடுநர்கள் பணிநியமனம் பெற்றனர். 37 நபர்கள் அடுத்த கட்டத்திற்கு தேர்வாகினர்.

## TATA ELECTRONICS நிறுவனத்திற்கான பெண்களுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், காஞ்சிபுரம்



05.09.2024 மற்றும் 06.09.2024 ஆகிய இரண்டு நாட்களில் காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் TATA Electronics நிறுவனத்திற்கான பெண்களுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது. இதில் 107 பெண் வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். இதில் தேர்வு செய்யப்பட்ட 20 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., அவர்களால் வழங்கப்பட்டது.

## மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், காஞ்சிபுரம்



21.09.2024 அன்று காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்ககம் இணைந்து பச்சையப்பன் ஆடவர் கல்லூரி, காஞ்சிபுரத்தில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது.

மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் 110 வேலையளிக்கும் நிறுவனங்கள் மற்றும் 3008 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டதில், 512 வேலைநாடுநர்கள் பணிநியமனம் பெற்றனர். பணிநியமனம் பெற்றவர்களுக்கு மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள், காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. வி. எம். பி. எழிலரசன் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், இ. ஆ. ப., ஆகியோர்களால் பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

# மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருநெல்வேலி



21.09.2024 அன்று தூய யோவான் கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் இயங்கி வரும் TP SOLAR நிறுவனத்தில் பணி நியமனம் பெற்ற 4 5 காது மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்கள் வழங்கினார். மேலும், 503 வேலைநாடுநர்கள் பணி நியமன ஆணைகளை பெற்றனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், ஈரோடு



24.09.2024 அன்று ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் 19 வேலையளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டனர். 135 மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்கள் பங்கேற்றனர். 40 பேருக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் 117 மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். திருமதி. ரா. ராதிகா உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருமதி. டி. டி. சாந்தி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொவ), ஆகியோர் கலந்து கொண்டனர். பணிநியமனம் பெற்றவர்களுக்கு 28.09.2024 அன்று கோவை சித்தாபுதூர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்பட்ட மண்டல அளவிலான மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.



# மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
கள்ளக்குறிச்சி



கள்ளக்குறிச்சி மாவட்டம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்ககம் (மகளிர் திட்டம்) வாயிலாக அரியலூர், அரசினர் மேல்நிலைப்பள்ளியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 28.09.2024 அன்று நடத்தப்பட்டது. இம்முகாமில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 103 முன்னனி தனியார் துறை நிறுவனங்கள், 1315 பெண்கள் உட்பட 2417 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். இதில் 221 பெண்கள் மற்றும் 5 மாற்றுத்திறனாளிகள் உட்பட 429 வேலைநாடுநர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எம்.எஸ்.பிரசாந்த், இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலும் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. க. வசந்தம். கார்த்திகேயன், அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது.

இவ்விழாவில் திருமதி.ஆ.லதா, வேலைவாய்ப்புத்துறை மண்டல இணை இயக்குநர், சேலம், திரு.சு.சுந்தர்ராஜன், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம். மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.மு.முரளிதரன் உள்ளிட்ட அரசுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வேலைவாய்ப்பு முகாமில் 429 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

# மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருச்சி

திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியில் 28.09.2024 அன்று மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப் குமார்.இ.ஆ.ப., அவர்கள், பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு.அருண்நேரு அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தேர்வு பெற்ற பணிநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில், வேலைவாய்ப்புத்துறை மண்டல இணை இயக்குநர் திரு. இர. தேவேந்திரன், வருவாய் கோட்டாட்சியர் திரு. அருள், துணை இயக்குநர் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் திருமதி. மகாராணி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி. ச.மாசில் ஆஷா, ஜமால் முகமது கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் ஹாஜி. அ. கா. காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜீ. எம். ஜமால் முஹம்மது, கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இம்மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 154 வேலையளிப்பவர்கள் மற்றும் 7 திறன் பயிற்றுநர்களும் பங்கேற்றனர். 4682 வேலைநாடுநர்கள் (2809 ஆண்கள், 1873 பெண்கள் (21 மாற்றுத்திறனாளிகள் உட்பட) கலந்து கொண்டதில் 482 வேலைநாடுநர்களுக்கு (ஆண்கள்-326, பெண்கள்-156 (மாற்றுத்திறனாளிகள்-7 உட்பட) பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இரண்டாம் கட்ட தேர்விற்கு 578 வேலைநாடுநர்கள் தேர்வு செய்யப்பட்டனர். திறன் பயிற்சிக்கு 46 நபர்கள் பதிவு செய்து பயன் பெற்றனர்.

# மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

## மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், இராமநாதபுரம்



இராமநாதபுரம் முகம்மது சதக் ஹமீது மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 28.09.2024 அன்று தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிம்ரன்ஜீத் சிங் காலோன் இ.ஆ.ப., அவர்கள் முகாமை துவக்கி வைத்து இம்முகாமில் தேர்வு பெற்றவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இம்முகாமில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.முகமது இர்பான், இ.ஆ.ப., அவர்கள் திரு. செ. மதுக்குமார், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், திரு. த.அருண்நேரு, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ.வ), மகளிர் திட்ட அலுவலர் திருமதி சித்ரா மற்றும் கல்லூரி முதல்வர் திருமதி மீரா ஆகியோர் கலந்து கொண்டு வேலையளிப்போரால் தேர்வுசெய்யப்பட்ட 459 வேலைநாடுநர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினர்.

# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் “உயர்வுக்குப்படி” தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

## உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மயிலாடுதுறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 'நான் முதல்வன் திட்டத்தின்' கீழ் 2021-22, 2022-23, 2023-24ஆம் கல்வியாண்டுகளில் 12ஆம் வகுப்பு முடித்து உயர்கல்வி நிறுவனங்களில் சேராத, 10, 11, 12ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி படிப்பில் இடை நின்ற மாணவ, மாணவிகள் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கு ஏதுவாக வழிகாட்டும் வகையில் வழிகாட்டும் நிகழ்ச்சிகள் 10.09.2024, 20.09.2024 ஆகிய தேதிகளில் மயிலாடுதுறை கோட்டத்தில் உள்ள தருமபுரம் ஆதினம் கலைக்கல்லூரியிலும் & 13.09.2024, 24.09.2024 ஆகிய தேதிகளில் சீர்காழி கோட்டத்தில் உள்ள விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும் நடத்தப்பட்டது






இந்நிகழ்ச்சியில், மயிலாடுதுறை மாவட்டத்தில் 2021-22, 2022-23, 2023-24ஆம் கல்வியாண்டுகளில் 12ஆம் வகுப்பு முடித்து உயர்கல்வி நிறுவனங்களில் சேராத, 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி படிப்பில் இடை நின்ற மாணவ, மாணவிகள் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிக்க, வழிவகை செய்யும் விதமாக, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி 'உயர்வுக்குப் படி' என்ற தலைப்பில் மயிலாடுதுறை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து தொடர்புடைய அரசு துறைகளையும் ஒருங்கிணைத்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள பொறியியல் கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்கள் கலந்துகொண்டு தங்கள் கல்றூரிகளில் உள்ள படிப்பு விவரங்கள் மற்றும் தற்போதைய காலியிடங்கள், அதற்கான கட்டண விவரங்கள் குறித்து அரங்கு அமைத்து துண்டு பிரசுரங்கள் வழங்குவதோடு, விருப்பம் உள்ள மாணவ மாணவிகளை தங்கள் கல்லூரியில் உடனடியாக சேர்க்க நடவடிக்கை மேற்கொள்வதோடு, வழிகாட்டுதலும் வழங்க உள்ளனர்.மேலும் இங்கு அமைக்கப்பட்டுள்ள அரங்குகளில், பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் மாற்றுத்திறனாளி மாணவ மாணவிகளுக்கு உயர்கல்வி தங்கி பயில்வதற்கான விடுதி வசதிகள், இட ஒதுக்கீடு மற்றும் கல்வி உதவித்தொகை திட்டங்கள் குறித்தும், வங்கிகள் வாயிலாக கல்வி கடன் பெறுவதற்கான அணுகுமுறைகள் உட்பட அனைத்து விவரங்களும், போக்சோ சட்டம் மற்றும் குழந்தைத்திருமான தடுப்பு சார்ந்து விழிப்புணர்வும், குறுகிய கால திறன் பயிற்சிகள் குறித்தும், மாணவ மாணவிகள் மனோதிடத்துடன் தங்கள் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட உள்ளது.

முக்கியமாக மாணவ மாணவிகள் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கு ஏதுவாக சாதிச்சான்று, வருமானச்சான்று, முதல் தலைமுறை பட்டதாரி சான்று போன்ற சான்றிதழ்களை இங்கேயே பெறுவதற்கு ஏதுவாக இ- சேவை மையம் ஏற்படுத்தப்பட்டதோடு, விரைவாக சான்றிதழ்களை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாடு அரசின் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி அனைத்து மாணவ, மாணவிகளும் ஏதேனும் ஒரு உயர்கல்வி நிறுவனத்தில் சேர்ந்து, நன்முறையில் படித்து வாழ்வினில் வெற்றி பெற்றிட மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் திரு. ஏ.பி.மகாபாரதி, இ.ஆ.ப., அவர்கள் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் 250க்கும் மேற்ப்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## நான் முதல்வன் திட்டத்தின் கீழ் “உயர்வுக்குப்படி” தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், தருமபுரி





நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்வுக்கு படி என்ற முகாம், தருமபுரி மாவட்டத்தில் உள்ள 107 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கடந்த 2022-23, மற்றும் 2023-24 ஆம் கல்வி ஆண்டுகளில் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று உயர் கல்லூரியில் சேராத மாணவர்கள், 12 ஆம் வகுப்பில் தோல்வியுற்றவர்கள், மற்றும் 1 2 ஆம் வகுப்பு தேர்வு எழுதாத இடைநின்ற மாணவர்கள் ஆகியோர்க்கு உயர்கல்வியில் சேர்க்கையின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் உயர்கல்வியின் சேர்க்கை 100 சதவீதம் உயர்த்தும் நோக்கத்துடன் இந்த உயர்வுக்குப் படி முகாம் 4 இடங்களில் நடத்தப்பட்டது.

முதலாவதாக நல்லம்பள்ளி, தருமபுரி மற்றும் காரிமங்கலம் ஒன்றியங்களில் உள்ள உயர்கல்வியில் சேராத மாணவர்களுக்கு தருமபுரி கல்வி மாவட்டத்தில் 09.09.2024 அன்று தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் இந்த முகாம் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் சேலம் மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் 271 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இரண்டாவதாக அரூர் கல்வி மாவட்டத்தில் (அரூர், மொரப்பூர் ஒன்றியங்கள்) 12.09.2024 அன்று அரூர் அரசு கலைக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 55 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மூன்றாவதாக கட்டமாக தருமபுரி கல்வி மாவட்டத்தில் 19.09.2024 அன்று பென்னாகரம் அரசு கலைக் கல்லூரியில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் திருமதி. கி. சாந்தி இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 258 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

நான்காவதாக கட்டமாக அரூர் (பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் கடத்தூர் ஒன்றியங்கள்) கல்வி மாவட்டத்தில் 23.09.2024 அன்று பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலைக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 153 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் "உயர்வுக்குப்படி" தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திண்டுக்கல்



09.09.2024 அன்று திண்டுக்கல் ஜி.டி.என் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு "உயர்வுக்கு படி" நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், ஜி.டி.என் கலைக் கல்லூரியின் தாளாளர் அவர்கள், உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திண்டுக்கல் மற்றும் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திண்டுக்கல் ஆகியோர் கலந்து கொண்டு மாணவ / மாணவிகளுக்கு உயர்கல்விக்கான வழிகாட்டுதல்கள், போட்டித்தேர்வுகளில் பங்கு கொள்வதற்கான வழிமுறைகள், TN Career Services Employment, கல்வித் தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் அரசால் வழங்கப்படும் கல்விக்கான உதவித் தொகை குறித்து சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் 297 மாணவ/மாணவிகள் கலந்து கொண்டனர்.

# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் "உயர்வுக்குப்படி" தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், சேலம்



தமிழ் நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் உயர்வுக்கு படி நிகழ்ச்சி 10.09.2024 அன்று புனித பவுல் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று கல்லூரியில் சேராத மாணவ மாணவிகளுக்கு உயர்கல்வி பயில வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர், டாக்டர். இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) சேலம், துணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) சேலம் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் 841 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் "உயர்வுக்குப்படி" தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், பெரம்பலூர்




பெரம்பலூர் ரோவர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 10.09.2024 அன்று நடைப்பெற்ற நான் முதல்வன் திட்டத்தின் கீழ் "உயர்வுக்குப்படி" நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் திருமதி.கிரேஸ் பச்சாவ், இ,ஆ.ப., இந்நிகழச்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். சப் கலெக்டர் திரு. கோகுல் இ. ஆ, ப. , உயர்கல்வியில் முக்கியத்துவம் குறித்து சிறப்புரையாற்றினார். பெரம்பலூர் மாவட்ட M.L.A திரு. பிரபாகரன் அனைத்து துறைகள் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்து உறையாற்றினார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. ஆ. பொ. ஆறுமுக வெங்கடேஷ்( பொ) உயர்கல்வியில் என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம் போன்ற தலைப்புகளில் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் திரு. மு. செல்வம், உதவி இயக்குநர் மாவட்ட திறன் பயிற்சி அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் உதவியாளர் திரு.இரா. சரவணன் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மொத்தம் 320 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் "உயர்வுக்குப்படி" தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், விழுப்புரம்



நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்வுக்கு படி நிகழ்ச்சி 11.09.2024 அன்று விழுப்புரம் அண்ணா பொறியியல் கல்லூரியில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க. பொன்முடி அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு.சி.பழனி, இ.ஆ.ப., அவர்கள் கூடுதல் ஆட்சியர் திரு.ஸ்ருதன் ஜெய் நாராயண் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியின் வாயிலாக 11 மாணவர்கள் உயர்கல்வி பயில கல்லூரியில் சேர்வதற்கான ஆணையை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

## நான் முதல்வன் திட்டத்தின் கீழ் “உயர்வுக்குப்படி” தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், புதுக்கோட்டை



நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 12.09.2024 அன்று நடைபெற்ற ” உயர்வுக்கு படி” என்ற நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர், திருமதி. மு. அருணா, இ. ஆ. ப, அவர்கள் கலந்து கொண்டு உயர்கல்வியின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றியதுடன் மாணவர்களுக்கு கல்லூரியில் பயில்வதற்கான ஆணைகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மைத்துறை, சமூக நலத்துறை, அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், அரசு தொழில்நுட்பக் கல்லூரி, அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஆகிய அரசு துறைகளின் அரங்குகள் அமைக்கப்பட்டன. மேலும், மாவட்ட தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் போட்டித்தேர்வுகள், வேலைவாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## நான் முதல்வன் திட்டத்தின் கீழ் “உயர்வுக்குப்படி” தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், ஈரோடு



12.09.2024 அன்று கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நான் முதல்வன் திட்டதின் கீழ் “ உயர்வுக்கு படி“ நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ராஜ கோபால் சுன்கரா, இ. ஆ. ப. , அவர்கள், சார் ஆட்சியர், கோபிசெட்டிபாளையம், உதவி ஆட்சியர், ஈரோடு, திருமதி. ரா. ராதிகா உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருமதி. டி. டி. சாந்தி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ( தொவ) , மாவட்ட கல்வி அலுவலர், ஈரோடு, திரு. ஆனந்தகுமார், உதவி இயக்குநர், மாவட்ட திறன்பயிற்சி அலுவலகம், ஈரோடு, மாவட்ட சமூக நல அலுவலர், ஈரோடு மற்றும் பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மேலும் இந்நிகழ்ச்சியில் 117 மாணவ / மாணவியர் கலந்து கொண்டனர்.





மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திண்டுக்கல்



# இந்திய விமானப்படை அக்னிவீர்வாயு தேர்வு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

இந்திய விமானப்படை அக்னிவீர்வாயு தேர்வு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 30.07.2024 அன்று திண்டுக்கல், புனித அந்தோனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடத்தப்பட்டது.

இந்திய விமானப்படை அலுவலர் திரு. இ. கனிக்குமார், ASC இந்திய விமானப்படை அக்னிவீர் வாயு தேர்விற்கு விண்ணப்பம் செய்வதற்கான வயது வரம்பு, கல்வித் தகுதி, தேர்விற்கு தயார் செய்யும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார். இந்திய விமானப் படையால் நடத்தப்படவுள்ள INDIAN AIRFORCE அக்னிவீர் வாயு தேர்வில் கலந்து கொள்வதற்கு இணையவழியில் https://agnipathvayu.cdac.in

என்றஇணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, இந்நிகழ்ச்சியில் திரு. மாதவ தாஸ், மண்டல வேலைவாய்ப்பு அலுவலர், சென்னை, உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திண்டுக்கல் மற்றும் கல்லூரி முதல்வர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் 2 3 1 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# இந்திய விமானப்படை அக்னிவீர்வாயு தேர்வு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்



மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தேனி








இந்திய விமானப்படை அக்னிவீர்வாயு தேர்வு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, 31.07.2024 அன்று கொடுவிலார்பட்டி கம்மவார் சங்கம், கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திரு. க. சீனிவாசன், கல்லூரி முதல்வர் வரவேற்புரையாற்றினார். இந்திய விமானப்படை அலுவலர் திரு. இ. கனிக்குமார், ASC இந்திய விமானப்படை அக்னிவீர் வாயு தேர்விற்கு விண்ணப்பம் செய்வதற்கான வயது வரம்பு, கல்வித் தகுதி, தேர்விற்கு தயார் செய்யும் வழிமுறைகள் குறித்து பவர் பாயிண்ட் விளக்கக் காட்சி வாயிலாக எடுத்துரைத்தார். தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. த.அருண்நேரு (மு.கூ.பொ) ஒன்றிய மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகள், தன்னார்வப் பயிலும் வட்டம், கல்வித் தொலைக்காட்சி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் போட்டித் தேர்வுகளுக்கான யூடியூப் சேனல், மெய்நிகர் கற்றல் வலைதளம், தனியார்துறை வேலைவாய்ப்பு இணையம் ஆகியவை குறித்து சிறப்புரையாற்றினார், திரு. மாதவதாஸ், மண்டல வேலைவாய்ப்பு அலுவலர் கலந்து கொண்டு கல்லூரி மாணவ / மாணவியர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் 400 கல்லூரி மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## பயிற்சி பிரிவு

# அரசு தொழிற்பயிற்சி நிலைய செயல்பாடுகள்

## பிரதம மந்திரி தேசிய தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம்

### அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், ஓசூர்







பிரதம மந்திரி தேசிய தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம் ஓசூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 15.07.2024 அன்று நடைபெற்றது. இம்மேளாவில் உதவி இயக்குநர் திரு.சி.பன்னீர் செல்வம், ஓசூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய துணை இயக்குநர் / முதல்வர் மற்றும் 20-க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். இம்மேளா மூலம் மாணவர்களுக்கு தொழில் நிறுவனங்களில் Apprenticeship Training வழங்கப்பட்டது. இதில் 350 கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். இம்மேளாவில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

## பிரதம மந்திரி தேசிய தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம்

### அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், கீரம்பூர்



பிரதம மந்திரி தேசிய தொழிற் பழகுநர் சேர்க்கை முகாம் 15.07.2024 அன்று நாமக்கல் மாவட்டம் கீரம்பூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில், நடைபெற்றது. இம்முகாமில் 11 தொழிற்நிறுவனங்கள் மற்றும் 130 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். இத்தொழிற் பழகுநர் சேர்க்கை முகாமில் கலந்து கொண்டு பயிற்சி நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்ட 39 பயிற்சியாளர்களுக்கு திரு.பெ. பார்த்தீபன், உதவி இயக்குநர் மற்றும் திரு.கி. ரமேஷ், பயிற்சி அலுவலர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், நாமக்கல் அவர்களால் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

# அரசு கலை கல்லூரியின் அரசு ஆதிதிராவிட மாணவியர் விடுதியில் தங்கி பயிலும் மாணவிகளுக்கான தொழிற்பிரிவு பயிற்சி நடத்துதல்

### மாவட்ட திறன் பயிற்சி அலுவலம், நாமக்கல்




"பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" (Beti Bachao Beti Padhao) என்ற திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தின் மூலம் அமிர்தா எஜிகேஷனல் டிரஸ்ட் என்ற பயிற்சி மையத்தின் பயிற்றுநர்களை கொண்டு திருவள்ளுவர் அரசு கலை கல்லூரியின், அரசு ஆதிதிராவிட மாணவியர் விடுதியில் தங்கி பயிலும் மாணவிகளுக்கு Self Employed Tailor மற்றும் Hand Embroidary தொழிற்பிரிவு பயிற்சிகள் 28.08.2024 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. மேலும், இவ்விடுதியில் 34 மாணவிகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

மேலும், மேப்பிங் ஆர்ட்ஸ் கில் அகாடமி என்ற பயிற்சி மையத்தின் பயிற்றுநர்களை கொண்டு நாமக்கல் ஆதிதிராவிட நலவிடுதியில் தங்கிபயிலும் மாணவிகளுக்கு Self Employed Tailor மற்றும் Hand Embroidary தொழிற்பிரிவு பயிற்சிகள் 31.08.2024 அன்று உதவி இயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், மற்றும் ஆதிதிராவிட நல துறை அலுவலர், நாமக்கல் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. மேலும், இவ்விடுதியில் 27 மாணவிகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

# தொழிற்கல்வி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

### அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கோட்டூர்



அரசு தொழிற்பயிற்சி நிலையம் கோட்டூரில், 30.08.2024 அன்று தொழிற்பயற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு தொழிற்கல்வி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தின் உதவி இயக்குநர் அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தொழிற்பயற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு தொழிற்பிரிவுகள் பற்றி எடுத்துரைத்தார். மேலும் தொழிற்பழகுநர் சேர்க்கையின் முக்கியத்துவத்தையும், தொழில்கல்வி பயின்றவர்களுக்கு கிடைக்கும் வேலைவாய்ப்புகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

# பயிற்சி பிரிவு

# அரசு தொழிற்பயிற்சி நிலைய செயல்பாடுகள்

## பிரதம மந்திரி தேசிய தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம்

### மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், திருவாரூர்



திருவாரூர் மாவட்டத்தில் பிரதான் மந்திரி தேசிய தொழிற்பழகுநர் பயிற்சி முகாா் (PMNAM) 23.09.2024 திங்கள் கிழமை அன்று காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக இணைப்பு கட்டிடத்தில் உள்ள மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு போக்குவரத்து கழகம், விவசாய கருவிகள் பணிமனை TALENT PRO INDIA- CHENNAI, TVS MOTOR COMPANY-HOSUR, MRF TYRES பெரம்பலூர் போன்ற நிறுவனங்கள் முகாமில் கலந்து கொண்டு பயிற்சியாளர்களை தொழிற்பழகுநர் பயிற்சிக்கு சேர்க்கை செய்தனர்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

(வேலைவாய்ப்பு பிரிவு)












# பல்வேறு
# போட்டித்தேர்வுகளுக்ளுக்கான
# கட்டணமில்லா பயிற்சி பெற

## ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள
## மாவட்ட வேலைவாய்ப்பு
## மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களை
## அணுகவும்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை

# மெய்நிகர் கற்றல் வலைதளம்

*https://tamilnaducareerservices.tn.gov.in*




தொடர்புக்கு @ tnvleportal@gmail.com

பின்தொடர @Department of Employment and Training

**ஒளியலையில் கற்க TN Career Services Employment**





தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை



# தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையம்

**www.tnprivatejobs.tn.gov.in**

## வேலைநாடுநர்கள்

- வேலைக்குப் பதிவு செய்க
- சுயவிவரத்தைப் பதிவேற்றுக
- விருப்பமான வேலையைப் பெறுக

## தனியார்துறை நிறுவனங்கள்

- கணக்கை உருவாக்குக
- வேலைகளைப் பதிவிடுக
- திறமையானவர்களை தேர்வு செய்க

Scan QR code or visit
www.tnprivatejobs.tn.gov.in

National Career Service

MCC MODEL CAREER CENTRE

வெளியீடு : வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்ககம், சென்னை - 32.